செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

RECEIVED 1970-7-8 Periodicals Division Library

இல: 1084 1970 ஜூலை 17 வெள்ளிக்கிழமை விலை சதம் 5



வேல் விழா உற்சவ ஆரம்ப நாளான நேற்று கொழும்பு சம்மாங் கோட்டார் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி, வள்ளி தெய்வானை சமேதராக காவடி ரதத்தில் வெள்ளவத்தை சம்மாங் கோட்டார் ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்திற்கு காவடி ரதத்தில் பவனி சென்றார்.

இராணி மாளிகைக்கு முன்பாக மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவும் மூதவைக் கட்டடத்திற்கு முன்பாக பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் சுவாமி தரிசனம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்களை முறையே மத்தியிலும் வலது கோடியிலும் காணலாம்.

## புத்தளத்தில் நிகழ்ந்த பெரும அவலம்:

# ரயிலுடன பஸ் பயங்கர மோதல்! 17 பேர் பலி!!

## படுகாயங்களுடன் 40 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

**ரயிலும் பஸ்ஸும் பயங்கரமாக மோதின! 17 பேர் பலியாகினர். நாற்பது பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் புத்தளத்தில் பாலாவியில் நேற்று நிகழ்ந்துள்ளது.**

இந்த விபத்தில் இறந்தவர்களும் காயமடைந்தவர்களும் பஸ் பிரயாணிகள் என்று சொல்லப்படுகிறது.

விபத்தில் சிக்கிய ஐவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தனர். ஏனைய 12 பேரும் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமடைந்து உள்ளனர்.

காயமடைந்த மேலும் 40 பேர் புத்தளம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

பாலாவியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்து நடைபெற்று உள்ளது.

விபத்துக்கு உள்ளான பஸ் புத்தளத்தில் இருந்து கல்பிட்டி நோக்கி ஓடிக்கொண்டு இருந்தது. இந்த பஸ்ஸில் 80 பிரயாணிகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பஸ்ஸை மோதிய ரயில் சிமேந்துப் பைகளை ஏற்றிக்கொண்டு புத்தளம் நோக்கிப் போய்க்கொண்டு இருந்தது.

புத்தளத்துக்கு அருகில் பாலாவியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பஸ்மீது ரயில் மோதியது. பஸ் சுக்கு நூறாக நொறுங்கியது.

விபத்தில் சிக்கியவர்கள் உடனடியாக புத்தளம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ரயில் வண்டியோடு பயங்கரமாக மோதிய பஸ் சுக்கு நூறாகியது. அத்துடன் ரயில் என்ஜின் பஸ் வண்டிமேல் ஏறியதால் பஸ் நிலத்தில் அமுக்கப்படவே பிரயாணிகள் நசுங்கி மாண்டனர்.

பிணங்கள் பஸ்ஸுக்குள், ரயில் என்ஜினால் நசுக்கப்பட்டிருந்ததால் புத்தளம் சிமெந்து தொழிற்சாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட கிரேனின் உதவியுடன் பஸ் தூக்கப்பட்டது. பிணங்கள் வெளியே எடுக்கப்பட்டன.

பஸ் மோதியவுடன் பஸ் டிரைவர் சிறு காயங்களுடன் தப்பி ஓடி விட்டாராம்.

புத்தளம் சரித்திரமே கண்டிராத இக் கோரவிபத்து மிகவும் பயங்கரமானதாகும். புத்தளம் ஆஸ்பத்திரியில் ஒரே அழுகைக் குரலாகவே இருக்கிறது. உறவினர்களை இழந்தவர்கள், பெற்றோரை பறிகொடுத்த பிள்ளைகள் இவர்களின் அழுகைக் குரல் பார்ப்போரைக் கதிகலங்கச் செய்கிறது. (ம)

## தமிழாராய்ச்சி மாநாட்டில் கருணாநிதி சொற்பொழிவு

பாரிஸ், ஜூலை. 16

"விண்வெளி சகாப்தத்தின் தேவைகளை நிறைவு செய்யும் அளவிற்குத் தமிழ்மொழி வளர்ச்சி அடைய வேண்டும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி நேற்று இங்கு மூன்றாவது உலகத் தமிழ் மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

இந்த வகையில் தமிழ் வளர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி மாநாட்டின் பிரதிநிதிகளை திரு. கருணாநிதி கேட்டுக்கொண்டார்.

ஐக்கியநாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனத்தின் பதில் டைரக்டர் ஜெனரல் டாக்டர் எம். ஆதிசேஷையா மகாநாட்டை திறந்துவைத்தார்.

விண்வெளி சகாப்தத்தைப் பிரதிபலிக்கும் முறையில் ஓர் ஆங்கில — தமிழ் அகராதி தயாரிக்கும் பணியை மாநாடு மேற்கொள்ள வேண்டும் என்று திரு. கருணாநிதி மேலும் பேசுகையில் ஆலோசனை கூறினார்.

அதேசமயம், மாநாட்டில் கூடியிருந்த ஆராய்ச்சியாளருக்கு அவர் ஓர் எச்சரிக்கையையும் விடுத்தார். அவர்களுடைய ஆராய்ச்சியே ஓர் முடிவாகிவிடக் கூடாது என்றும், பொதுவான ஒரு மொழி வளர்ச்சிக்கு அவர்கள் உதவவேண்டுமென்றும் அவர் கூறினார். (ம)

### மீனாட்சி



முகமூடி போட்டு கொள்ளை அடிச்சாங்களாம்! சிலருக்கு முகமே முகமூடியாக இருக்கிறது தெரியாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு சேலைகளை கடத்த முயன்றாராம்

# இந்தியா சென்று வந்த ஐயருக்கு அபராதம்

மன்னார், ஜுலை 16

தலைமன்னார் சுங்க அதிகாரி அறியாத வண்ணம் ஆறு இந்தியச் சேலைகளை கடத்த முயன்றதாக கூறப்படும் ஐயர் ஒருவருக்கு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இச் சேலைகளின் பெறுமதி 300 ரூபா என மதிப்பிடப்படுகின்றது.

இந்தியாவுக்குச் சென்றுவிட்டு தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பலில் இந்த ஐயர் இங்கு திரும்பி வந்தார். இவர் இந்தச் சேலைகளைக் கடத்த மிகச் சாதாரணமான ஒரு வழியையே கையாண்டார் எனக் கூறப்படுகின்றது.

சுங்கப் பரிசோதனையில் இருந்து தப்புவதற்காக இரு போர்வைகளுக்கு இடையில் இச் சேலைகளை வைத்து கட்டிக்கொண்டு வந்தார் எனக் கூறப்படுகின்றது.

தலைமன்னார் பியரில் சுங்க அதிகாரி ஐயரின் பொதிகளைப் மேலெழுந்த வாரியாகப் பரிசோதனை செய்து ஐயரை அனுப்பிவிட்டார்.

ஆனால் ஐயர் இக்குறிப்பிட்ட பொதியிலேயே கவனமாக இருக்கவே சுங்க அதிகாரி சந்தேகம் கொண்டு மீண்டும் பரிசோதனை செய்தபோது சேலைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

தலைமன்னார் சுங்க உதவி கலெக்டர் திரு. கே. சோமசுந்தரம் முன்னிலையில் இப்பிரயாணி ஆஜர் செய்யப்பட்டார்.

பொருட்களை வெளிப்படுத்த தவறியமைக்காக 1000 ரூபா அபராதம் விதித்த கலெக்டர், ஆறு சேலைகளையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார்.

இப்பிரயாணி அபராதத் தொகையை உடனடியாகச் செலுத்த முடியாதவராக இருந்ததால் அபராதம் செலுத்தப்படும் வரை அவரது பிரயாணப் பத்திரங்களை கலெக்டர் தடுத்து வைத்ததாக அறியப்படுகின்றது. (ர)

### பீலிக்ஸ் டயஸை அழைக்க முடிவு

மன்னார், ஜுலை, 16

உள்நாட்டு, பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை மன்னாருக்கு அழைப்பதென மன்னார் மாவட்ட கிராம சபைத் தலைவர்கள் சமாசக் கூட்டத்தில் திர்மானிக்கப்பட்டது.

சமாசத்தின் கூட்டம், மன்னார் உதவி உள்ளூர் ஆட்சி ஆணையாளர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற போது, மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு சமாசத்தின் தலைவரும், இலுப்பைக் கடவை கிராம சபைத் தலைவருமான திரு. வே. கைலாயபிள்ளை தலைமை வகித்தார். (ர-185)

### பன்குடா வெளியில் இடி விழுந்தது

செங்கலடி, ஜுலை, 16

பன்குடாவெளிக் கிராமத்தில் கடும் மின்னல் முழக்கத்துடன் இடி விழுந்ததால் 5 தென்னை மரங்கள் சுவாலைவிட்டெரிந்து கருகின.

தென்னை மரத்தண்டை வீடுகளில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 4 பேர் பல மணி நேரம் நினைவிழந்து, பின் சுய நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர். (ர-56)

### தட்டுப்பாடு

நிந்தவூர், ஜுலை 16

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களிலும் தமிழ் மலர் 1-ம் வகுப்பு பாட புத்தகத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும், சிலேற்றின் விலை திடீரென உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. முன்பு 1-25 சதமாக பெற்று வந்த இலங்கை சிலேற் தற்பொழுது 1 ரூபா 50 சதம் முதல் 1 ரூபா 75 சதம் வரை விற்பனையாகின்றது. (ர-217)

## நெல்லியடி வீட்டில் 1½ லட்ச ரூபாவுக்கு கடத்தல் சாமான்

யாழ்ப்பாணம், ஜுலை 15

ஒன்றரை லட்ச ரூபா பெறுமதியான பெருந்தொகைக் கள்ளக் கடத்தல் பொருட்கள் நெல்லியடியில் கைப்பற்றப்பட்டன.

நெல்லியடியில் ஒரு வீட்டை வல்வெட்டித்துறைப் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தலைமையிலான ஒரு கோஷ்டி முற்றுகையிட்டபோதே இப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

75 மூடை ஏலக்காய், 1140 போத்தல் வாசனைத்திரவியம் உட்பட வேறு பல பொருட்களும் இவ் வீட்டில் ஒளித்து வைக்கப்பட்டு இருந்தனவாம்.

சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் பொலீஸார் யாழ். சுங்கப் பகுதி அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (ர-220)

## எட்டுபிள்ளைத் தந்தை மீது வேலைக்காரி குற்றச்சாட்டு

"குமாரதாச எனது எஜமான். அவர் எட்டு பிள்ளைகளின் தந்தை. நான் அவரது வீட்டில் வேலைக்காரியாக இருந்தேன். அப்போது ஒரு நாள் இரவு வீட்டில் எல்லோரும் உறங்கிய பின்னர் எஜமான் நான் படுத்திருந்த அறைக்கு வந்து பலவந்தமாக என் மீது குற்றம் புரிந்தார்"

இளம் வேலைக்காரப் பெண் ஒருத்தி கொழும்பு மேலதிக நீதவான் திரு. ஆர். எல். டி- சில்வா முன்னிலையில் இவ்வாறு கூறினார்.

எட்டுப் பிள்ளைகளின் தந்தையான தொலன்னவை, விகாரமாவத்தையைச் சேர்ந்த குமாரதாச என்பவர் இவ்வழக்கில் எதிர் மனுதாராவார்.

தன்னிடம் வேலை பார்த்த கிராண்ட்பாஸ், ஸ்டேட் ரோட்டைச் சேர்ந்த ஏ. சுசிலாவதி என்னும் யுவதி மீது குற்றம் புரிந்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தான் குற்றவாளியல்ல என எதிரி கூறியதை அடுத்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சுசிலாவதி தனது சாட்சியத்தில் கூறியதாவது:- "எனது வயது 14. இச்சம்பவம் நடைபெறும் போது எதிரியின் வீட்டில் வேலைக்காரியாக இருந்தேன்.

"அன்று நள்ளிரவு யாரோ ஒருவர் என்னருகே வந்ததை உணர்ந்தேன். கவனித்த போது அது எஜமான் என்பதைக் கண்டேன்.

"எனது பாயின் மேல் அவர் உட்கார்ந்தார். பின்னர் குற்றம் புரிந்து விட்டு ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்றார். மறுநாள் காலை எழுந்ததும் நோனாவிடம் இதைச் சொன்னேன்.

"அடுத்த தடவையும் அவர் வரும்வரை சப்தம் போடாமல் இருக்கும்படி நோனா கூறினார். மறுநாளும் எஜமான் என்னிடம் வந்ததை நோனா அவதானித்துக் கொண்டார்."

இக்கட்டத்தில் மேல் விசாரணை ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ர)

## பதிவுக்காரர் அலுவலகம் செல்லும் மக்கள் புகார்

மன்னார், ஜுலை, 16

மன்னார் பதிவுக்காரர் அலுவலகத்தில் இறப்பு, பிறப்பு, திருமணப் பதிவு அத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட ஏனைய பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதில் பொது மக்களுக்கு சிரமமும் இடைஞ்சலும் ஏற்படுவதாக புகார் செய்யப்படுகின்றது.

இவ்வலுவலகத்தில் எந்தவித தஸ்தாவேஜுகளையும் தேவைக்காக உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு தாமத நிலை நிலவுகின்றதாம். அத்துடன் ஒரு பிறப்பு அத்தாட்சிப் பத்திரமோ அல்லது வேறு எந்த பத்திரமோ பெற்றுக் கொள்வதற்கு மனுப் பண்ணுபவர்கள் வாரக்கணக்கில் அலைய வேண்டியிருக்கின்றதாம்.

மன்னாருக்குத் தூர இடங்களில் இருந்து இவ் அலுவல்கள் நிமித்தம் வருபவர்கட்கு மேலும் அதிக சிரமமும் மன வேதனையும் ஏற்படுவதாக கூறப்படுகின்றது. (ர-185)

### கல்வி பாதிப்பு

நிந்தவூர், ஜுலை 16

நிந்தவூர் அல் அஷ்றக் உயர் வித்தியாலயத்தில் கடமையாற்றிய பல ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளமையால் இங்கு ஆசிரியர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. (ர-217)

### வேலியே பயிரை மேய்ந்த கதை.

நாவலப்பிட்டி, ஜுலை 15

குமரிகளோடு ரயிலில் சல்லாபம் புரிந்த ரயில்வே பாதுகாப்புச் சேவை ஆபிஸர் மூவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் ரயில் நிலைய அதிகாரிகளிடம் காட்டிக் கொடுக்கப்பட்டனராம்.

கொழும்பில் இருந்து மலைநாட்டு ரயில் வண்டியில் பிரயாணம் செய்த எம். பி தாம் பிரயாணம் செய்த ரயில் பெட்டியில் மூன்று பேர் குமரிப் பெண்களோடு சல்லாபம் செய்து கும்மாளமிட்டுக் கொண்டு வந்ததை அவதானித்து வட்டகொட ரயில் நிலைய உப அதிபரிடம் முறையிட்டாராம்.

நானுஓயா பொலீஸாரும், ரயில் நிலைய அதிகாரிகளும் மேற்கண்ட மூவர் பற்றியும் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ர-215)

### மலிவான விலையில்

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என்று அரசாங்க அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. இதைத்தான் பொது மக்கள் நீண்ட காலமாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அது விரைவில் வந்து கிடைக்கட்டும். எவ்வாறு அரசாங்கம் விலைகளைக் குறைக்கப் போகின்றது என்பதையிட்டும் மக்களுக்கு அக்கறையில்லை. குறைந்தால் தான் அவர்கள் மனம் திருப்திப்படும். இதற்கு உதவியாகக் கொழும்பில் அறுபது இடங்களில் அத்தியாவசிய உப உணவுப் பொருள்களைக் கூட்டுறவு யூனியன் வைத்து விற்கப் போகின்றது. முனிசிப்பல் மார்க்கட்டுகளில் நியாய விலைக் கடைகளை நிறுவ இருக்கின்றது. வானிலும் கொண்டு திரிந்து விற்பனவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செய்தால் துணிப்பட்ட கொள்ளை லாப வியாபாரிகளை முறியடிக்கலாம் என்றே நம்புகிறோம். ஆனால் விநியோகம் முறையாகவும் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். அதில் தான் யாவும் தங்கியுள்ளன.

**தந்தி**


## நவீன முறை சிறிய கை மெசின்

இலவசம்! எம்பிராய்டரி கத்தரி ஒன்று, எம்பிராய்டரி புத்தகம் ஒன்று, வளையல் ஒரு சோடி, அல்லது புதிய மோஸ்தர் காதணி இலவசம். பெண்மணிகளே! இதோ, எம்பிராய்டரி பூக்கள் தைப்பதற்கு எம்பிராய்டரி கை மெசின் ஒன்று. இந்த மெசின் மூலம் எந்தவிதமான துணியிலும் மிருகங்கள், பறவைகள், எழுத்துக்கள் பூக்கள் ஆகிய மோஸ்தர்களை மிகவும் அழகாகவும், தெளிவாகவும் தைத்துக் கொள்ள முடியும். இதன் விலை ரூபாய் 3-50. இந்த மெசினுடன் மேற்குறிப்பிட்ட பரிசுகள் இலவசமாக கொடுக்கப்படும்.

வி. பி. பி. மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்களும் தாமதமின்றி இன்றே எழுதுங்கள்!

*Manager*
**SEWING DEPARTMENT (TH)**
**Central Suppliers, Dehiwala.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54 வயதுக் கிழவனை துணிந்து கரம் பற்றினுள்

# பந்தயம் பிடித்த குமரி பரிதாபமாக மாட்டினுள்

### கோபம் கொண்ட உற்ருர் விரட்டி அடித்தனர் இருவரையும்

இறங்கலே, ஜூலே. 16

எனக்கு வெற்றியா, உனக்கு வெற்றியா? என்று 17 வயது பருவப் பெண்ணும், 54 வயது வயோதிபரும் பிடித்த பந்தயத்தில் பருவப் பெண் தோல்விக் கண்டு அந்த வயோதிபரை மணந்து கொண்டார்- இச் செயல் கண்டு ஊரார் ஆத்திரத்தில் இருவரையும் விரட்டியடித்துள்ளனர்-

இவ் விசித்திரச் சம்பவம் உடிஸ் பத்துவையை அடுத்துள்ள கிராமமொன்றில் நடந்துள்ளது. இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது:-

ஒரே கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண்ணும் வயோதிபரும் நகைச்சுவையாக கதைத்துக் கொண்டிருக்கும் போது, இருவருக்கும் மத்தியில் ஒரு போட்டி எழுந்தது. இருவரும் பந்தயம் பிடித்துக் கொண்டனர்.

இப் பெண் தனக்குத்தான் வெற்றி என்ற நம்பிக்கையில் "நான் தோல்விக் கண்டால் உங்களை மணந்து கொள்கிறேன்" என்று வாக்களித்து விட்டாள்.

இருவரினதும் பந்தயமுடிவில் தன்ளாத வயது கிழவன் தன் வெற்றிக் களிப்பில் துள்ளிக் குதித்தான். இதிலும் பருவக் குமரி தனக்கு கிடைக்கப் போகிருள் என்று ஆடினன், பாடினன்- ஆசை வெள்ளத்திலேயே மிதந்தான்.

மங்கையோ விளையாட்டாக சொன்னது வினையாக மாறிவிட்டதே என்று துடித்தாள், துவண்டாள். ஆனல் அவள் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. எனவே, ஒரே முடிவுக்கு வந்தவளாக தன்னுடைய வாக்கு பொய்யாக கூடாது என்று வயோதிபனையே மணந்து கொண்டாள்.

இச் சம்பவத்தினைக் கண்ட பெண்ணின் பெற்ருேர் உற்றரெல்லாம் ஆத்திரமடைந்து பெண்ணை இழுத்துவந்து வயோதிபனை மறந்துவிட வேண்டினர். ஆனல் எதையும் கேட்கமறுத்தாள் யுவதி. இதனல் கோபங்கொண்ட உற்ருர் மாத்திரமின்றி ஊராரும் சேர்ந்து இருவரையுமே கிராமத்தை விட்டு வெளியேற்றிவிட்டனர்.

(ர-243)

### இந்திய மாணவருக்கு "மாஸ்டர்" பட்டம்

லெனின்கிராடு, ஜூலே. 16

ரஷ்ய – இந்திய கலாசார உறவுகளின் வரலாறு சம்பந்தமான ஆராய்ச்சிக்காக என். பி. வர்மா என்ற இந்திய மாணவருக்கு லெனின்கிராடு பல்கலைக்கழகத்தில் எம். எஸ். ஸி. (வரலாறு) என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

1860–1880-ம் ஆண்டுகளின் போது இந்தியாவைப் பற்றிய ரஷ்ய முற்போக்குச் சிந்தனைகள் எவ்வாறு இருந்தன என்பதை இவர் ஆராய்ந்து உள்ளார். இவரது வரலாற்று இயல் + சமுதாய இயல் ஆராய்ச்சியைச் சோவியத் நிபுணர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

(ர)

### தரம் உயர்கிறது

சம்மாந்துறை, ஜூலே, 16

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த சம்மாந்துறை உப தபால் அலுவலகம் வெகு விரைவில் தரம் உயர்த்தப்படவிருக்கின்றது-

(ர-217)

### பெண்கள் விடுதியில் புக வீரர்கள் முயற்சி

எடின்பேர்க், ஜூலே. 16

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் கிராமத்தில் பெண் வீராங்கனைகளின் விடுதியைச் சுற்றிவச அமைக்கப் பட்டுள்ள பாதுகாப்பு அரணைத் தகர்த்தெறிய பல தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பெண் வீராங்கனைகள் தனித்து வைக்கப்பட்டிருக்கும் விடுதியினுள் அடையாளம் தெரியாத ஆண் வீரர்கள் சிலர் நுழைய முயன்ற போதிலும் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை.

(ர–7)

### கடிதம் எழுதி வைத்த குமரி ஆற்றில் குதித்து மாண்டாள்

என்னே அதிர்ஷ்டமற்ற பெண் நான்! என் துயர் தீர்ப்பார் இவ்வுலகில் யாருமில்லை. என் துயரைக் கூற ஒரு சகோதரனே அன்றி நண்பர்களோ கிடையாது. சில வேளையில் தற்கொலை செய்ய எண்ணுவேன். இதைவிட வேறு என்ன இருக்கின்றது செய்ய?

இந்த வாசகங்கள் அடங்கிய ஓர் உருக்கமான கடிதத்தை எழுதிவைத்துவிட்டு உயிரைமாய்த்துள்ளாள் இருபத்தொரு வயது இளம்பெண் ஒருத்தி.

மஹஹேனையைச் சேர்ந்த டி. லீலாவதி என்ற பெண்ணே ஆற்றில் பாய்ந்து தற்கொலை செய்து உள்ளார்.

இம் மரணம் சம்பந்தமாக விசாரணை நடாத்திய விசாரணை அதிகாரி திரு- டி- ஜே- கலபொட முன் சாட்சியமளித்த இறந்த பெண்ணின் தந்தையான ஓாயிஸ் சிங்கோ கூறியதாவது:—

மகள் தற்கொலை செய்து கொள்வதற்கு முதல் நான் பகல் உணவிற்காக பால் சோறு தயாரித்ததற்காக அவளை ஏசினேன். இச் சம்பவத்தை தொடர்ந்து அவள் கவலையுற்றுக் காணப்பட்டாள்.

அடுத்தநாள் காலையில் மகளை வீட்டில் காணவில்லை. வீட்டை விட்டே ஓடிவிட்டாள்-

மூன்று நாட்களின் பின்னர் ஆற்றில் பிணம் ஒன்று மிதப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்தபோது அது என் மகளின் பிரேதம் என அறிந்தேன்.

இந்நிலையில் இறந்தவரால் எழுதப்பட்டதாக கருதப்படும் கையொப்பம் அற்ற கடிதம் ஒன்று மரண விசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி மனவேதனையால் செய்து கொண்ட தற்கொலை எனத் திர்ப்பளித்தார்.

(ர- 7)

### புதிய அதிபர்

நிந்தவூர், ஜூலே. 16

நிந்தவூர், அல் அஷ்றக் உயர் வித்தியாலய புதிய அதிபராக, காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய ஜனப் சீ. ஓ. லெஸ் தகிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ர–217)

### கன்னியை அணைக்க முயன்ற காளைக்கு கிடைத்த பரிசு!

இறங்கலே, ஜூலே. 16

யாருமில்லாத வேளையில் தன்னந்தனிமையில் வீட்டினுள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளங் கன்னியின் இடையழகையும், நடையழகையும் ரசித்துக் கொண்டிருந்த கட்டிளம் காளையொருவன், திடீரென வீட்டினுள் புகுந்து கன்னியை கட்டியணைக்க முயன்றதும் கன்னியின் தாய் தும்பு கட்டையால் காளைக்கு மாறி. மாறி கொடுத்தாளாம்.

இச் சம்பவம் இறங்கலே பகுதியைச் சேர்ந்த ஒரு தோட்டமொன்றில் நடந்துள்ளது. சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பவள மேனியும், பஞ்சவர்ணக் கிளியின் தோற்றமும் கொண்ட அழகுக் கன்னி தன்னந்தனிமையில் தனது வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போது அவளின் அழகு பக்கத்தே நின்று கொண்டிருந்த தடித்த உருவமும் கம்பீரத் தோற்றமும் கொண்ட இளம் காளையின் கண்களில் பட்டதாம்.

தன்னையே மறந்த காளை திடீரென்று வீட்டினுள் புகுந்து ஆசை வெள்ளத்தில் உணர்ச்சித் துடிப்பில் கன்னியை இரு கரங்களையும் நீட்டி அணைக்க முயன்றுளும். நடந்த சம்பவங்களையெல்லாம் மறைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த கன்னியின் தாய் கம்புக் கட்டையை எடுத்துக் கொண்டோடி காளையின் கரங்கள் கன்னியின் உடல் மீது படுமுன் பளார், பளார் என்று வாங்கினள்

தெனல் வெட்கம் கொண்ட காளை அன்றிரவே யாருக்கும் தெரியாமல் ஊரையே விட்டு ஓடி விட்டாரம்.

(ர-243)

### பெண் உடல் உறுப்புகளை வீதியில் எறிந்தது யார்?

இளம் பெண் ஒருவரின் சில உடலுறுப்புகளும், ஆடைகளும் டிரங்குப் பெட்டி ஒன்றில் போடப்பட்டு நாகொட பொலீஸ் வட்டாரத்திலுள்ள அத்துமலே பாலத்திற்கருகே கிடந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த டிரங்குப் பெட்டியில் கிடந்த மனித உடலுறுப்புகளைப் பரிசோதித்த மாகாண வைத்திய அதிகாரி அவை ஓர் இளம்பெண்ணுடையவை எனத் தெரிவித்துள்ளார். இது ஓர் மர்மம் நிறைந்த கொலையாக இருக்கலாமென நாகொடப் பொலிஸார் கருதுகின்றனர்.

இம் மரணம் சம்பந்தமாக கால் திடீர் மரண விசாரணையதிகாரி திரு. ஹெக்ஸ் விக்கிரமசிங்கா நடத்திய விசாரணையில் என்- வி- பியசேன என்பவர் சாட்சியம் அளித்தபோது தெரிவித்ததாவது. இம் மாதம் 6–ம் திகதியன்று இரவு 8-30 மணியளவில் தேநீர் குடிப்பதற்காக பாலத்திற்கு அண்மையில் உள்ள கடைக்குச் சென்று கொண்டிருந்தேன்.


அப்போது கார் ஒன்று பாலத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. அக் காரிலிருந்து இறங்கிய ஒருவர் காரின் "டிக்கி"யைத் திறந்து ஒரு பெட்டியை எடுத்துப் பாதையோரத்தில் வீசியதைக் கண்டேன். அதன்பின் கார் சென்றுவிட்டது-

அன்றிரவு தான் குறித்துக் கொண்ட காரின் இலக்கத்தை சாட்சி சமர்ப்பித்தார்.

நாட்டில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் இந்த இலக்கத்தைக் கொண்ட காரைக் கண்காணிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணை ஒத்திவைக்கப்பட்டது-

(ர- 7)

### குறும்புக்காரச் சுப்பி



# மைனரைச் சுட்ட ம...

## அல்லிகது

## கலாச்ச + காமம் + குரூ...

இரவு நேரம். மணி பதினென்று இருக்கும்.

குற்றச் செயல்களுக்குப் பெயர்போன இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பேரு நாட்டின் லிம்மா நகரின் ஒதுக்குப் புறமாக இருந்த பொலீஸ். நிலையம் ஒன்றில் அந்த அழகி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு வயது இருபத்தி ஐந்து ஆகி இருந்தாலும், அங்கத் தளர்ச்சி ஏதும் இல்லாத கன்னிக் கவர்ச்சியுடனே இருந்தாள்.

அவளுடைய காப்பி நிறத் தலை முடி சற்றுக் கலைந்து கிடக்க, உள்பாடியுடன் சேர்ந்த அவளுடைய விலை உயர்ந்த கவுன் ஒரு புறம் கிழிந்து தொங்க, தன்னுடைய நடுங்கிய மெல்லிய கரங்களால் ஆடையோடு சேர்த்து மார்பைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு நின்ற அவள், "இன்ஸ்பெக்டர்! நான் ஒருவனைச் சுட்டுக் கொன்று விட்டேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் தான் சுட்டுக் கொன்றேன்" என்று பதறினாள்.

பொழுது விடிந்து பொழுது போவதற்குள் குறைந்தது, பத்துத் துப்பாக்கிக் கொலைகளைச் சந்தித்துச் சந்தித்துப் பழகிப் போன இன்ஸ்பெக்டர் ரோமன் பிரேஸர் முதலில் மிக மிகச் சாவதானமாகத்தான் தன் விசாரணையை ஆரம்பித்தார்.

முதலில், "உங்களுடைய பெயர் என்ன?" என்று கேட்ட அவர் பேனாவை எடுத்து ரிப்போர்ட் தயாரிக்க முயன்றவர், அழகி தன்னுடைய பெயர் பிரோனஸ் இன்கிரிட்டி ஒலிவிரா என்றதும் அவரையும் அறியாமலே துள்ளி எழுந்தார்.

ஏன் என்றால் தன் கணவர் பெயராக அவள் சேர்த்துச் சொல்லிய டி ஒலிவிரா அந்த நகரத்திலேயே முதல் நம்பர் பணக்காரன். அதுமட்டுமல்ல; அரசியலிலும் முன்னணியில் உள்ள குடும்பம் அது. அவனுடைய தந்தை பேருவின் விவசாய அமைச்சராகவே இருந்திருக்கிறார். எனவேதான் மிகுந்த எச்சரிக்கையாக கையாள வேண்டிய வழக்கு இது என்று முடிவு செய்து கொண்ட பிரேஸர், "முதலில் உட்காருங்கள். பிறகு நடந்தவற்றை ஒன்று விடாமல் அப்படியே சொல்லுங்கள்" என்று அந்த அழகியிடம் கேட்டுக் கொண்டார்.

"நன்றி!" என்று ஒற்றைச் சொல்லில் பதில் தந்து விட்டு நாற்காலியில் அமர்ந்து கொண்ட அந்த அழகி, அப்படி அமரும் போது தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ மார்புடன் அணைத்துக் கிடந்த தன் கரத்தைச் சற்றுத் தளர்த்தியதால் பருவச் செழிப்பின் பெரும் பகுதி வெளிப்பட்டு இளைஞரான இன்ஸ்பெக்டருக்குப் பெருத்த சங்கடம் ஏற்பட்டது. இதற்குப் பிறகு அவளை நேரில் முறைத்துப் பார்ப்பதைக் குறைத்துக் கொண்டு, குனிந்து தன் ரிப்போர்ட் புத்தகத்தை பார்த்துக் கொண்டே அவர் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"இன்று மாலை 5–30க்கு நான் என் கணவருடைய பண்ணையில் இருந்து என்னுடைய பியூக் காரில் புறப்பட்டு எங்கள் பண்ணையில் விளைந்துள்ள உருளைக் கிழங்குகளை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வரக் கிளம்பினேன். அதை முடித்துவிட்டு வேறு சில சில்லரைக் காரியங்களையும் முடித்து விட்டு நான் பண்ணைக்கு மீண்டும் திரும்பும்போது இரவு மணி பத்தாகிவிட்டது.

தெற்கு நெடுஞ்சாலையில் நான் போகும் பொழுது அது தனித்துக் கிடந்தது. போக்குவரத்தே இல்லை. திடீரென்று ஒரு மினி மைனர் கார் புயல் வேகத்தில் சீறிக் கொண்டு என்னைத் தொடர்வதைக் கண்டேன். நான் வேகமாகச் செல்வதற்கு ஆக்ஸிலேட்டரை ஆனமட்டும் அழுத்திப் பார்த்தேன். ஆனால் அந்த ஸ்போர்ட் மாடல் கார் என் பியூக்கை முந்திக் கொண்டு முன்னால் சென்று என் வழியை மறித்தது. நான் அதில் மோதி விடாமல் இருப்பதற்காகத் தற்செயலாக எதிர்ப்பட்ட ஒரு சந்தில் காரைத் திருப்பினேன். அந்த மினி மைனர் அங்கேயும் என்னைத் தொடர்ந்து என்னை மேலே போக விடாமல் தடுத்தது.

நான் கீழே இறங்கியதும் அதில் இருந்து இறங்கிய முரட்டு மனிதன் என்னை நோக்கி வந்தான். வரும் பொழுதே அவனுடைய பார்வை சரியாக இல்லை. காமாந்தகாரனைப் போல ஒரு வித வெறியோடு என்னை நெருங்கிய அவன் திடீரென்று என்னைக் கட்டிப் பிடித்து, என் ஆடைகளைக் கிழித்து என்னைக் கற்பழிக்க முயன்றான். அந்த முரட்டுத் தடியனிடம் இருந்து என் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக நான் எப்போதும் என் கைப்பையில் தற்காப்பிற்காகக் கொண்டு போகும் இந்தத் துப்பாக்கியால் அவனைச் சுட்டு விட்டு நேராக இங்கு வருகிறேன்!" என்று இடையிடையே விக்கலுடனும், அடிக்கடி விம்மலுடனும் அந்தக் கவர்ச்சிவல்லி தன் கதையை ஒரு வழியாகச் சொல்லி முடித்தாள்.

## நடந்த சம்பவம்

இன்ஸ்பெக்டர் பிரேஸருக்கு அவள் கூறிய இந்தக் கற்பழித்தல் கதையை முழுதும் நம்பவும் முடியவில்லை. அவள் இருந்த கோலத்தைப் பார்க்கும் போது அதை நம்பாமலும் இருக்க முடியவில்லை.

எனவே மேற்கொண்டு துப்புக் கிடைக்கும் வரை மௌனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது என்று கருதிய அவர், "இந்த விஷயம் உங்களுடைய கணவருக்குத் தெரியுமா?" எனக் கேட்டார்.

இந்தக் கேள்விக்கு விடை சொல்ல ஒரு விநாடி தயங்கிய அழகி "இல்லை! சுட்ட இடத்தில் இருந்து நேராக நான் இங்குதான் வருகிறேன்!" என்றாள்.

"சரி நான் அவருக்குப் போன் செய்து இங்கு வரச் சொல்கிறேன்!" என்று கிளம்பிய பிரேஸர், பக்கத்து அறையில் இருந்த டெலிபோனில் அவளுடைய கணவனுக்குப் போன் செய்தார். பிரேஸர் எதிர்பார்த்த படியே, யாரோ வேலையாள்தான் போனை எடுத்தான். அவனிடம் "அம்மா இருக்காங்களா?" என்றார்.

மறுமுனையில் இருந்து "இப்பத்தான் வெளியே போனாங்க!" என்ற பதில் கொஞ்சம்கூடத் தயக்கம் இல்லாமல் வந்தது.

"சாயந்திரம் 5–30 மணிக்கு வெளியே போனவங்க அப்புறம் திரும்பி வந்தாங்களா?" என்று தன் அடுத்த பொலீஸ் கொக்கிக் கேள்வியைத் தொடர்ந்தார் பிரேஸர்.

"சாயந்திரம் போனவங்க கொஞ்ச நேரத்திற்கு முன்னாலேதான் திரும்பினாங்க. அவசரமாக
கிட்டே ஏ...
மறுபடியும்
போயிருக்க...

அவன்
சொல்லி
பான், த...
யது கிடை...
தால் பிரே...
டொக்கென்...
விட்டு அ...
அறைக்குத்

இவள் மு...
யைக்
எதையோ
இருந்து
என்று
இருந்த சந்...
னும் சற்று...
ஆரம்பித்த...

கொலை ந...
திற்கு அழகி...
அழைத்துச்
பார்த்த ...
தச் சந்தேக...
வலுப்ப...
தடையங்கள்...
றன்பின்
கிடைத்தன.

முதலில் ...
பழிப்புக் க...
பட்டது ...
மைனர் கா...
மறித்துக்
நிறுத்தப்பட...
றிற்கு ஒன்று...
கத்தில் ஒ...
நோக்கி மி...
"பார்க்"
டிருந்தது. பி...
வுகள் சுத்த...
பட்டிருந்தன...
மினி மை...
இரண்டு பக்...
களும்
திறந்து கொ...
தன.

பியூக்கில்
அவள் தன்னை...
வருபவனைத்
யுடன் வரவே...
டத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாக ஐயா
ஏதோ பேசிட்டு
யும் வெளியே
ருக்காங்க."
ன் இதைச்
பி முடித்திருப்
தனக்கு வேண்டி
டைத்து விட்ட
பிரேஸர் போனே
கென்று வைத்து
அழகி இருக்கும்
குத் திரும்பினர்-
ள் முழு உண்மை
க் கூறவில்லை-
யா தன்னிடம்
மறைக்கிறுள்
பிரேஸருக்கு
சந்தேகம் இன்
சற்று உறுதிப்பட
த்தது-
லை நடந்த இடத்
அழகியை நேரிலே
துச் சென்று
பொழுது இந்
தேகம் மேலும்
படுவதற்கான
ங்கள் அங்கு ஒன்
ஒன்ருகக்
தன.

ில் அழகியின் கற்
க் கதையில் கூறப்
போல மினி
கார் பியூக்கை
க் கொண்டு
ப்படவில்லை. ஒன்
ன்று மிக நெருக்
ஒரே திசையை
மிக அழகாகப்
" செய்யப்பட்
து. பியூக்கின் கத
த்தமாக மூடப்
ந்தன- ஆனல்
மைனரிலோ
பக்கக் கதவு
"ஆ"வெனத்
கொண்டு கிடந்

கில் இருந்து
ன்னைத் துரத்தி
னத் துப்பாக்கி
ரவேற்கப் பதட்
ங்கியது

உண்மையாக இருக்குமானல் கணவர் சீட்டின் கதவு திறந்தேதான் கிடக்க வேண்டும்- மூடி இருக்கக் கூடாது- அதே போன்று மினி மைனரிலும் அவன் துரத்தி வந்தவனுக இருந்தால் ஒரு பக்கக் கதவுதான் திறக்கப்பட்டிருக்க வேண்டுமே தவிர, இரண்டு பக்கக் கதவுகளும் திறந்திருப்பதால் அதிலிருந்த இருவர் ஏககாலத்தில் இரண்டு பக்கத்திலும் கதவைத் திறந்து கொண்டு இறங்கியிருக்க வேண்டும். இன்ஸ்பெக்டரின் பொலீஸ் மூளை இப்படி எல்லாம் துப்புத் துலக்கிக் கொண்டிருந்தது.

மினி மைனரில் வந்தவன் உண்மையில் அழகியைக் கற்பழிக்க வந்தவனுக இருந்தால் அவனுடைய சடலம் பியூக்கின் அருகிலே கிடக்க வேண்டும்- ஆனல் அவனுடைய சடலமோ மினி மைனரையும் தாண்டி அப்பால் கிடந்தது. இதிலிருந்து அழகியின் கரத்தில் துப்பாக்கியைப் பார்த்ததும் பதறி ஓடிய அவனை அவள் துரத்திச் சென்றிருக்க வேண்டும் என்று பிரேஸர் முடிவு செய்தார்-

இன்ஸ்பெக்டரின் குறுக்குக் கேள்விகளால் தன்னுடைய குட்டு உடைபட்டுப் போவது போல இருந்ததுமே அழகி வேறு ஒரு கதைக்குத் தாவிக் கொண்டாள்.

தனக்கு ஒரு வக்கீல் காதலனுக உண்டு என்றும், அன்று மாலை பியூக்கை அந்தச் சந்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டுத் தான் வக்கீலுடன் ஒரு ஓட்டலில் அன்றைய மாலைப் பொழுதை இன்பமாகக் கழித்ததாகவும், திரும்பி வந்து வண்டியை ஸ்டார்ட் செய்யும் பொழுது ஒரு சக்கரம் பஞ்சராகி இருந்ததாகவும், என்ன செய்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கையில் அந்த மினி மைனர் அங்கு வந்து ஒழுங்காக நிறுத்தப்பட்டதாகவும், அதிலிருந்து வந்த இளைஞன் தன் கார் டயரை மாற்றித் தந்ததாகவும், ஆனல் அப்படி மாற்றும் பொழுதே அவன் தன்னிடம் மிகத் தாராளமாக நடந்து கொண்டதாகவும், இறுதியில் தன் உடைகளைக் கிழித்துத் தன்னைப் பலாத்காரம் செய்ய முயன்றதாகவும், தற்காப்பிற்காக, தான் அவனைச் சுட்டதாகவும், சுட்டுவிட்டுத், தான் நேரே தன் கணவனிடம் சென்று விவரத்தைச் சொன்னதாகவும், அவர் உடனே பொலீஸ் ஸ்டேஷனுக்குத் தன்னை அனுப்பி வைத்ததாகவும், தன் காதல் விவகாரம் வெளிப்படக் கூடாது என்பதற்காகவே முதலில் தான் அதை மறைத்ததாகவும் இப்போது அந்தச் கள்ளி கதைக்க ஆரம்பித்தாள்.

இந்தப் புதுக் கதையின் படி பார்க்கப் போனலும் அவள் கூறியது முற்றிலும் பொருத்தமற்றதாகவே இருந்தது. முதலில் அவளுடைய காரில் டயர் ஏதும் மாற்றப்படவில்லை என்று மோட்டார் மெக்கானிக்குகள் சர்டிபிகேட் கொடுத்தார்கள்-

இரண்டாவதாக இறந்து கிடந்தவனுடைய நேர்த்தியான உடையிலோ அல்லது அவனுடைய கரங்களிலோ டயர் மாற்றினதற்கான ஒரு சிறு எண்ணெய்க் கறைகூடப் பட்டிருக்கவில்லை.

டயர் மாற்றிய ஒருவனல் அவளுடைய ஆடை கிழிக்கப்பட்டு இருந்தால் அதிலும் எண்ணெக் கறை பட்டிருக்க வேண்டும். ஆனல் அது சலவைச் சுத்தம் கலையாமலே இருந்தது.

அடுத்ததாக இன்ஸ்பெக்டர் பிரேஸர் கொலை செய்யப்பட்டவனுடைய பாக்கெட்டை ஆராய்ந்தார். அப்படி ஆராய்ந்தபோது அவருக்கு மற்ருெரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. ஏனென்றல் கொலை செய்யப்பட்டவனும் சாதாரணமானவன் அல்ல- கவுண்ட்ஜோஷி என்ற அவன், ஒரு சீமாட்டியின் கணவன் என்பது அவனுடைய முகவரி அட்டையில் இருந்து தெரிந்தது.

எனவே அழகியும் அவனும் கள்ளக் காதலர்களாக இருக்க வேண்டும். அன்று மாலையும் இந்தத் தனிச் சந்தில் தனித்திருக்கையில் ஏதோ காதலர் சச்சரவு ஏற்பட்டு அது கொலையில் முடிந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

இன்ஸ்பெக்டரின் கழுகுக் கண்கள் அதன் பிறகு அந்த இருவரின் தனி வாழ்க்கையை ஆராய்வதில் திரும்பியது.

அழகியின் கணவன் சீமானுக இருந்தாலும் கிழவனுக இருந்தான். எனவே அழகி அழகிய மாற்று வாலிபர்களைக் காதலர்களாக நாடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தாள். அதே போன்று கவுண்ட் ஜோஷியின் மனைவியும் பணக்காரியாக இருந்தாலும் நாற்பது வயதுக் கிழவியாக இருந்தாள். இருபது வயது ஜோஷிக்கும் அந்தக் கிழவிக்கும் பொருத்தம் சிறிதும் இல்லாததால் அவன் அந்த வட்டாரத்து டொன்ஜுவானுகவே — மைனராகவே இருந்து வந்தான் என்ற புள்ளி விவரங்கள் வீட்டு வேலைக்காரர்கள், டிரைவர்கள் போன்ற மறுக்க முடியாத சாட்சிகளின் மூலம் கிடைத்தன.

ஆனல் அந்த வித்தாரக் கள்ளியோ ஜோஷியைத் தனக்குத் தெரியவே தெரியாது என்று ஒற்றைக்காலில் நின்ருள். முன்பின் தெரியாத அவன் முரட்டுத்

(6-ம் பக்கம் பார்க்க

# மலையகத்தில் கலை, கலாசாரம் வளர வழி என்ன?

உழைத்துழைத்து நலிந்து போன இந் நாட்டு ஒடுக்கப்பட்ட தொழிலாள விவசாயிகள், "நமக்கென்றுதான் விடிவு பிறக்கப் போகின்றதோ?" என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த வேளையில், "ஐக்கிய முன்னணி" இந்த நாட்டில் மக்கள் அரசாங்கத்தை ஸ்தாபித்தது-

தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய முன்னணியின் வெற்றி அறிவிக்கப்பட்டவுடன் நசுக்கப்பட்ட மக்கள் உள்ளத்திலெல்லாம் ஒரு புது உறுதியேற்பட்டது-

"எப்படியோ நமது உரிமைகள் ஓரளவு பாதுகாக்கப்படும்- இந்த நூற்றியம்பது ஆண்டுகளாக நசுக்கப்பட்ட நாம் இனியாவது ஓரளவு சுபீட்சமாக வாழலாம். சலிக்காது தொடர்ந்து உழைப்போம்" என்று இந் நாட்டுத் தொழிலாள, விவசாய மக்கள் புதுத் தெம்பு பெற்றுக் கொண்டனர்- இந்தத் தெம்பிலும், இவ் வீழத்திரு நாட்டில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது எமது மலையகம் தான்- ஏனெனில், இந் நாட்டிலுள்ள ஏனைய தொழிலாள, விவசாய மக்களைவிட இது வரை கடுமையாக நசுக்கப்பட்டவர்கள். நசுக்கப்படுபவர்கள் எமது மலையகப் பாட்டாளிப் பெருங்குடி மக்களல்லவா?

இந்த நாட்டிலே மிகவும் கேவலமான வாழ்க்கை அமைப்பைக் கொண்டவர்களான எமது மலையகப் பாட்டாளிப் பெருங்குடி மக்கள், தொடர்ந்தும் பிரிவினைக்குள்ளாகாது- இந்த நாட்டின் முற்போக்குச் சக்திகளுடன் இணைய வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கடந்த வாரம் வலியுறுத்தியிருந்தேன்- முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைக்கு விடிவு காண வேண்டிய அதே வேளையில், எமது இதர பிரச்சினைகளையும் ஆராய்ந்து, அதைத் தீர்த்துக் கொள்ள வழி அமைத்தல் வேண்டுமல்லவா?

அதனையொட்டி, எமது கலை, கலாசாரத்தை வளர்க்க வழி என்ன? என்பதைப் பற்றி ஈண்டு ஆராய்வோம்-

இன்று மலையகத்தின் மூலை, முடுக்கெல்லாம் எமது கலை, கலாசாரத்தைப் பற்றிப் பேசப்படுவதை நாம் காணக்கூடியதாயிருக்கிறது- சிறுசிறு நகரங்கள், மலையகத் தோட்டங்கள் அனைத்திலும் கலை வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன- மலையகம் முழுவதிலும் உள்ள மன்றங்கள் அனைத்தினதும் பெயர்கள் மாத்திரமே வேறுபட்டனவே. தவிர நோக்கம் ஒன்றுதான்-

ஆயினும், இத்தனை மன்றங்கள், கலை வளர்ச்சிக் கழகங்கள் இருந்த போதும் எமது கலை, கலாசாரம் மந்த நிலையிலேயே இருக்கிறது- உயர்ச்சி ஏணியிலே ஒருபடி கூட ஒழுங்காகச் செல்லவில்லை என்பது கண்கூடு- இந்நிலை ஏன் ஏற்பட்டதெனச் சிறிது சிந்திப்போமானல், வெட்கக்கேடான பல சம்பவங்கள் எமக்குத் தெரிய வரும்-

ஒரு மன்றம் தாபிக்கப்படும்போது ஒரு தலைவர்- அவருக்குத் துணையாகவும் பதிலாகவும் ஒருவர்- மன்றச் செயல்களை முழுமையாகக் கவனிக்க ஒரு செயலாளர்- இவருக்குத் துணையாக ஒருவரோ அல்லது இருவரோ இருப்பர்- மன்றப் பொருள்களைச் சேகரிக்கவென ஒரு பொருளாளர்- அவருக்குத் துணையாக ஒருவர்- இதைவிடச் சிலரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்படும்-

இப்படித் தெரிவு செய்யப்படுபவர்கள் மன்ற முன்னேற்றத்தில், அதன் செயல் திட்டங்களில் அக்கறையுள்ளவர்களாகவே இருப்பர்- ஆயினும், ஒவ்வொருவரும் தனிப்போக்குடையவர்களாக இருப்பர்- ஒவ்வொருவருக்கும் ஒரு கொள்கை, இலட்சியம் இருக்க வேண்டிய அதே வேளையில் மன்றங்களில் அதைச் செயல்படுத்த முனைவதாலேயே பல இடையூறுகள் விளைவதுண்டு-

இனி எவ்வகையில் இந்த இடையூறுகளைத் தீர்ப்பதென்பது பற்றியும், எமக்குள் எப்படியான கொள்கைத் திட்டம் இருக்க வேண்டுமென்பது பற்றியும், அதைச் செயல்படுத்துவதெங்ஙனம் என்பது பற்றியும் சிறிது ஆராய்வோம்-

ஒவ்வொரு மன்றமும் தனது தனிப் போக்கை ஒழித்துக் கட்டும் அதே வேளையில், சமுதாய மறுமலர்ச்சிக்காக, கலை, கலாசார வளர்ச்சிக்காக, மன்ற நிர்வாகிகளும் தமது தனிப் போக்கை மன்றச் செயல்களில் காட்டாது இருப்பது அவசியமாகும்- ஒவ்வொரு மன்றமும், சமுதாய மறுமலர்ச்சிக்கேற்ற, குறிப்பாக பாட்டாளிப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைச் சுபீட்சத்திற்கேற்ப, புதுமைக் கலை, கலாசார வளர்ச்சிக்கேற்ப, கலை என்னும் பெயரில் படைக்கப்படும் காம உணர்ச்சிகளைத் தூண்டி விடும் (தற்போதைய சினிமா போன்று) படைப்புக்களைக் கண்டிப்பதற்கேற்ற கொள்கைத் திட்டமொன்றை உடனடியாக வகுக்க வேண்டியது அவசியம்-

சிந்தைத் தெளிவுள்ளவர்கள் மன்றங்களின் நிர்வாகப் பொறுப்பையேற்று, சிதறிக் கிடக்கும் மன்றங்களை ஒன்றிணைத்து, மலையகமெங்குமுள்ள மன்றங்களுக்கென ஒரு பொதுத் திட்டத்தை வகுக்கும் அதேவேளையில், அத்திட்டம் தேசிய ரீதியில் இந்நாட்டில் உள்ள ஏனைய கலை, கலாசார கழகங்களின் செயல் திட்டத்தோடு ஒத்திருப்பதாக அமைய வேண்டும்- அதற்காகப் பிற்போக்குவாதக் கொள்கைத் திட்டங்களை வகுத்து விடாது பார்த்துக் கொள்வதும் அவசியமாகும்-

இந்நாட்டுப் பெரும்பான்மை இனத்தவரோடும் வட, கிழக்காரோடும் இணைவதென்பதை விட, நாடு முழுவதுமுள்ள நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட பாட்டாளிப் பெருங்குடி மக்களோடு எமது மலையகத் தோட்டப் பாட்டாளிகளும் இணைந்து, முற்போக்கான செயல் திட்டங்களை வகுக்க வேண்டிதே முக்கியமாகும்-

இவ்வகையிலே எமது ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்த்துக் கொள்ளத் திட்டம் தீட்ட வேண்டும்- அப்போதுதான் தீர்க்கவும் முடியும்-

ஜெ. ம. ஜேசுராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பட்டப்பகலில் தோட்டத்தில் நடந்தது

# கொழுந்துகூடைஉருள காதலனுடன் பறந்தாள்

இரங்கலை, ஜுலை, 16

**தலையில் இருந்த கொழுந்து கூடையையும் விட்டெறிந்து விட்டு வேலை ஸ்தலத்திலிருந்து பட்டப் பகலில் தனது பழைய கள்ளக் காதலனுடன் பக்குவமாக பஸ் வண்டி மூலம் கம்பி நீட்டினாள் கொழுந்து கொய்யும் அழகு மங்கை.**

இவ் ருசிகர சம்பவம் இறங்கலை பகுதியைச் சேர்ந்த தோட்டமொன்றில் நடந்துள்ளது. இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

வயதிலே சிறியவளானாலும் கட்டான உடலும், குனத்த மார்பும், மெல்லிய இடையும், அழகு நடையும், சிவந்த முகமும் கொண்ட கொழுந்து கொய்யும் அழகு மங்கையானவள் தனது அடுத்த வீட்டில் உள்ள வாட்டச் சாட்டமான வாலிபனைக் காதலித்து வந்தாள். இது பெற்றோருக்குத் தெரியவே பெற்றோர் தடை விதிக்கவே தவித்த ஜோடி, யாருக்கும் தெரியாமல் நள்ளிரவில் ஊரையே விட்டு ஓடி மூன்றாவது நாள் திரும்பவும் வீட்டுக்கே வந்தது.

ஒரு மாத காலமாக அப்படியே இருந்த அப்பெண் மீண்டும் சம்பவ தினம் கொழுந்து பறிப்பதற்காக வேலைக்கு சென்றாள். காலை நேரத்தில் தனது காதலனைக் கண்டவள் பகல் போஜனத்திற்கு வீட்டுக்குச் சென்றாள்.

தலையை வாரி சீவி முடிந்து சிங்காரித்து அழகு ராணியாக காட்சியளித்தவள், வேலைக்கு வருபவளைப் போல் கூடையை தலையில் மாட்டிக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினாள்.

காதலன் கண் ஜாடை காட்டவே அத்தனை பேரினது கண்களிலும் மண்ணைத் தூவி விட்டு தலையிலிருந்த கூடையையும் வீசி எறிந்து பஸ்ஸில் காதலனுடன் காற்றாய் பறந்து விட்டாள்.

(ர-243)

## அமெரிக்க தளபதி விபத்தில் மரணம்

சைகோன், ஜுலை 16

தென் வியட்நாமில் நடைபெற்ற ஹெலிகாப்டர் விபத்து ஒன்றில் அமெரிக்க விமானப் படை முதலாவது பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ஜோர்ஜ் காஸே கொல்லப் பட்டார்.

இந்தச் செய்தியை தென் வியட்நாமில் உள்ள அமெரிக்க ராணுவத் தலைமையகம் தற்பொழுது ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்த ஹெலிகாப்டர் விபத்து கடந்த 7-ம் திகதி நடைபெற்றது.

கொல்லப்பட்ட தளபதியுடன் ஹெலிகாப்டரில் பிரயாணம் செய்த 6 அதிகாரிகள் பற்றிய தகவல் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

ஆஸ்பத்திரி ஒன்றில் உள்ள காயம் அடைந்த இராணுவ வீரர்களை இவர் பார்வையிடச் சென்ற சமயமே இந்த விபத்து நடைபெற்றது.

(ல-5)

## மைனரைச் சுட்ட...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தனமாக என்னைப் பலவந்தம் செய்ய முயன்றான். நான் தற்காப்புக்காகச் சுட்டேன் என்ற கதையில் அவள் அழுத்தமாக நின்றாள். ஆனால் இன்ஸ்பெக்டரின் விடாமுயற்சி இந்த முடியாத கதைக்கும் ஒரு முடிவைக் கொண்டு வந்தது. போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் "பீட்" பொலீஸ்காரர் ஒருவர் ஒரு வாரத்திற்கு முன்பு தான் போக்குவரத்தை ஒழுங்கு செய்யும் பொழுது அழகி ஓட்டி வந்த பியூக் காரும், ஜோஷி ஓட்டி வந்த மினி மைனரும் தற்செயலாக அருகருகில் நின்றதாகவும், அந்த நடுரோட்டிலேயே ஜோஷி அந்தக் காரில் இருந்து இந்தக் காரில் இருந்தவளை முத்தமிட்டதாகவும், அவன் தன்னுடைய முகவரியை ஒரு சிகரெட் அட்டையில் எழுதித் தந்ததாகவும், இதனால் டிராபிக்சே சிறிது நேரம் குலைந்து விட்டதாகவும், எனவே இந்த நிகழ்ச்சி தனக்கு நன்றாக நினைவில் நிற்பதாகவும் சாட்சி சொன்னார்.

பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடும் பையன் ஒருவனும் கொலை நடந்த அன்று மாலை 6 மணிக்கு அழகியும் ஜோஷியும் மினி மைனர் காரில் மிக நெருக்கமான நிலையில் வந்து தன்னிடம் பெட்ரோல் போட்டுக் கொண்டதாக நேரில் கண்ட சாட்சியம் அளித்தான்.

இதற்கு மேலும் தன்னுடைய "கற்பழிப்பு" நாடகம் செல்லாது என்பதைப் புரிந்து கொண்ட அழகி, ஜோஷியின் காமக் களியாட்டத்திற்கு அவனுடைய பணக்கார மனைவி பணம் தர மறுத்து, அவனுடைய பாக்கெட் மணியைக் குறைத்ததாகவும், இதனால் அவன் இந்த அழகியைப் பணத்துக்கு நெருக்கவே, தன் கணவனிடம் இந்தக் காதல் விவகாரத்தைச் சொல்லி விடுவேனென மிரட்டியதாகவும், அவனுடைய தொல்லை மிகுந்து விடவே அவனைத் தான் கொன்றதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாள். என்ன ஒப்புதல் வாக்குமூலம் அளித்தும் என்ன? பேருவின் குளறுபடியான சட்டங்கள் வெறும் மூன்றாண்டுச் சிறைத் தண்டனையையே குண்டு கலைப் பரிசளித்த அந்தக் கள்ளிக்கு அளித்தது.

## வேலை நிறுத்த முடிவையும் கொண்டாடினர்

கல்கத்தா, ஜுலை 16

மேற்கு வங்காளத்தின் 24 மணி நேர வேலை நிறுத்த முடிவைக் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் நேற்று கொண்டாடினர்.

எறிகுண்டுகளை வெடித்தும் பட்டாசு கொளுத்தியும் இவர்கள் இவ் வேலை நிறுத்த முடிவைக் கொண்டாடினர்.

மேற்கு வங்காளத்தில் கவர்னர் ஆட்சியை எதிர்த்து கம்யூனிஸ்டுகள் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

## சோவியத் வீரர்களுக்கு உயர்ந்த விருது

"சோயுஸ் – 9" விண்கல வீரர்களின் மாபெரும் சாதனையைப் பாராட்டும் வகையில், ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனாதிபதி நாஸர் "நைல் விருது" என்னும் நெக்லேசை இருவருக்கும் வழங்கினார்.

(ர)

## கள்ளக் காதல் கொண்டவள் மைத்துனன் பேச்சால் பலி

இறங்குலை, ஜுலை: 16

கணவன் வீட்டிலில்லாத நேரத்தில் மனைவி மாற்றானுடன் கள்ளத் தொடர்பாம். கணவனின் தமையன் மச்சானை இது குறித்து ஏசவே மங்கை நஞ்சிடம் தஞ்சம் புகுந்து பிணமானாள்.

மனதை உருக்கும் இச் சம்பவம் பற்றிய விபரமாவது:—

இப்பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளைக்குத் தாயான பிரஸ்தாப மங்கை (வயது இருபத்து மூன்று) யின் கணவன் வவுனியாவில் வேலை செய்து வருகிறாராம். இப்பெண்ணோ கணவன் இல்லாத சந்தர்ப்பத்தில் பக்கத்து வீட்டிலுள்ள வாலிபனுடன் காதல் தொடர்பு கொண்டு விட்டாளாம்.

இத் தொடர்பை இப் பெண்ணின் கணவனின் தமையன் அறிந்து "கணவனில்லாத நேரத்தில் இப்படியா முறை கேடாக நடந்து கொள்வது" என்று ஏசி விட்டு போய் விட்டாராம்.

இதனைப் பொறுக்காத மங்கை அத்தனையும் வெறுத்து நச்சுத் திராவகத்திடம் தஞ்சம் புகுந்து பிணமானாள்.

இவ் விபரம் தெல்தெனிய மரண விசாரணை அதிகாரி நடத்திய விசாரணையில் தெரிய வந்தது.

(ர-243)

## தலைவர் தெரிவு

நிந்தவூர், ஜுலை 16

நிந்தவூர், "பூங்கா எழுத்தாளர்" மன்றத்தின் புதிய தலைவராக ஜனாப் ஏ. எல். எம். சலீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்றப் போஷகராக நிந்தவூர் கிராமாட்சி மன்றத் தலைவர் ஜனாப் ஐ. எச். எஸ். எம். புகாரி தெரிவுசெய்யப்பட்டார்.

(ர-217)

## தங்க நகை திருட்டு

மன்னார், ஜுலை. 16

2,560 ரூபா பெறுமதியான பத்து தங்க நகைகள் திருட்டுப் போய் விட்டதாக மன்னாரைச் சேர்ந்த கெஸ்பர் அந்தோனிப் பிள்ளை என்பவர் பொலீசில் புகார் செய்துள்ளார்.

இது சம்பந்தமாக மன்னார் குற்றப் பிரிவைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரிகள் கிராமப்புற பெண் ஒருவர் உட்பட பலரை விசாரணை செய்துள்ளனர்.

ஜுன் மாதம் 23-ம் திகதியன்று இந்நகைகள் தன்னிடமிருந்து களவாடப்பட்டுள்ளதாக அந்தோனிப்பிள்ளை பொலீசில் புகார் செய்துள்ளார்.

(ர-7)


## மணிப்புரி சாரிகள்

"மணிப்புரி" சாதியைச் சேர்ந்த மிக விலை உயர்ந்த சாரிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அழகான கண்கவர் சித்திர வேலைகளைக் கொண்ட இச்சாரிகள் நீங்கள் விரும்பும் எல்லா வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். கைதேர்ந்த சித்ரக் கலைஞர்களாலும், வல்லுநர்களாலும் இந்திய கலாபவனத்தில் நடாத்தப்பெற்ற சித்திரக் கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனங்கவரும் சித்திர வேலைப்பாடுகளே இச் சாரிகளில் பொருந்தியுள்ளன.



ஒரு சாரியின் விலை ரூபா 29–50 மாத்திரமே.
ஒவ்வொரு சாரியுடனும் ஒரு சட்டைத் துணியும் கவர்ச்சியான ஒரு பிரேஸியரும் இலவசமாக அனுப்பப்படும்.
தபால் செலவு இலவசம்.

இது சாயம் மாறாது. நீண்ட காலம் பாவிப்பதோடு எந்தவொரு சவர்க்காரத்திற்கும் தரம் மாறாதது. ஸ்திரிக்கை செய்ய வேண்டியதில்லை. இதன் அழகான தரமும், குன்றாத தோற்றமும் உங்கள் மேனியழகை மென்மேலும் அழகுறச் செய்கின்றது. எனவேதான் இதனைப் பிரபல நடிகைகளும் அணிகின்றார்கள்.

பாடசாலைகளுக்கும் வேண்டிய உற்சவங்களுக்கும் ஏற்ற இந்த சாரியை வாங்குவதற்கு இன்றே நீங்கள் விரும்பும் நிறத்தைக் குறிப்பிட்டு ஒரு தபாலட்டை மூலம் தெரிவிக்கவும். வி. பி. பி. V.P.P. மூலம் அனுப்பி வைக்கப்படும். (பிரேஸியர் அளவுகளை அனுப்புங்கள்.) தயவு செய்து உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

The Manager
ANESCO AGENCIES (TH)
191/1, High Level Road, Kirillapone Colombo 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு சந்தேக நபர்கள் தலைமறைவு

# மீன்பிடித் தகராறில் மீனவர் தாக்குண்டார்

மன்னார், ஜூலை- 16

நான்கு மீனவர்களால் மிக மோசமான முறையில் தாக்கப்பட்டவர் எனக் கூறப்படும், குடும்பஸ்தரான இன்னொரு மீனவர், மிக ஆபத்தான நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரின் உயிரைக் காப்பாற்றுவதில் டாக்டர்கள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். இதன் தொடர்பாக, இந் நபர்மீது அவசர சத்திரசிகிச்சை செய்துள்ளதாக அறியப்படுகின்றது. எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த காதர் என்ற (42) இந் நபர் ஜீவ-மரணப்போராட்டத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இக் கோரத் தாக்குதல் சம்பவத்துக்கு டைனமைட் வெடி மூலம் மீன்பிடிக்கும் சம்பவமே காரணமாக இருந்துள்ளது என்று பொலீஸாருக்குக் கூறப்பட்டுள்ளதாம். இச்சம்பவத்தில் சம்பந்துப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்றும், மன்னார் பொலீஸார் இதையிட்டு விசாரணை செய்து வருகின்றனர் என்றும் தெரிகின்றது.

மன்னார் பள்ளிமுனை கடற்கரையிலிருந்து ஓரிரெண்டு மைல்களுக்குப்பால் கடலில் நடந்துள்ள இச் சம்பவத்தையிட்டு மேலும் கூறப்படுவதாவது:-

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த காதர் என்பவரும் இன்னொரு நபரும் வள்ளத்தில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அந்நேரம் பிறிதொரு வள்ளத்தில் வந்த நான்கு நபர்கள் டைனமைட் வெடி எறிந்து மீன்பிடிக்கத் தொடங்கினர். இதையிட்டு இலேசான முறையில் ஆட்சேபனை தெரிவித்த காதர் டைனமைட் வெடியினால் தான் மீன்பிடிக்க முடியவில்லை என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து கடலில் எழுந்த வாக்குவாதத்தின் போது, மேற்படி நான்கு நபர்களும் காதரை கொடூரமாகத் தாக்கினராம். வள்ளந் தாண்டும் தடிகளாலும், கைகளாலும் சுற்றி வளைத்து காதர் தாக்கப்பட்ட போது மற்ற நபர் அங்கிருந்து ஓடிச் சென்று தன்னைப் பாதுகாத்துக் கொண்டாராம்.

தாக்குதலால் மூர்ச்சையுற்று வீழ்ந்த காதர் இறந்து விட்டார் என நினைத்து, தாக்கிய சந்தேக நபர்கள் நால்வரும் தலைமறைவாகி விட்டனராம். (ர-185)

## அழகிய யுவதியின் கூந்தல் உயிருக்கு எமனாக வந்தது

குளியாப்பிட்டி. ஜூலை, 16

குளியாப்பிட்டி, கும்பல்வெவயைச் சேர்ந்த ரீட்டா மார்கிரட் 20 வயது அழகிய யுவதி.

தந்தையின் நெல் ஆலையில் உதவி புரிவது அவளது வேலை. இன்னொருவரின் காலில் இடறுண்டு விழுந்ததால் நீண்ட கூந்தல் நெல் இயந்திர பட்டியில் சிக்கியது.

இயந்திரம் உடனே நிறுத்தப்பட்டாலும், அவள் தலைமயிர் அவ்வளவும் அகன்று, மூர்ச்சித்துக் காணப்பட்டாள். குளியாப்பிட்டி வைத்தியசாலைக்கும், பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கும் எடுத்துச் செல்லப்பட்ட ரீட்டாவின் உயிரைக் காப்பாற்ற முடியாது போய் விட்டது.

இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி சடுதியாய் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்- (ர-15)

## பட்டதாரி மாணவருக்கு 9 வருட கடூழியச் சிறை

வித்தியாலங்காரப் பல்கலைக் கழக மாணவன் ஒருவனுக்கு ஒன்பது வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு அசைஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

வித்தியோதயப் பல்கலைக் கழக பட்டதாரி மாணவரான மலகொடகே ஜோதிபால (17) என்பவர் இந்த வழக்கில் எதிரியாவார்.

கொலன்னாவை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐ. எம். விக்கிரமபால (16) என்ற மாணவனைக் குத்திக் கொன்றதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பு அசைஸ் நீதியரசர் திரு. எஸ். ஆர்- பொன்சேகா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதுபோன்ற குற்றச்சாட்டுக்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், சம்பவ தினம் எதிரி மனக் கோளாறுடன் இருந்தபடியால் குறைவான தண்டனை வழங்கப்படுவதாகவும் நீதியரசர் தனது தீர்ப்பில் சொன்னார். (ர)

## டிக்கட் இன்றி பிரயாணம்செய்து தப்பி ஓடினார்

நாவலப்பிட்டி, ஜூலை 15

டிக்கெட் இன்றி பிரயாணம் செய்த ரயில்வே பாதுகாப்புச் சேவை உத்தியோகஸ்தர் ஒருவர் ரயில் நிலைய அதிகாரியிடம் மாட்டிக் கொண்டு, தனது அறிமுக அட்டையைக் காட்டி தப்ப முயன்றார்-

கொழும்பில் இருந்து பண்டாரவளை நோக்கிச் சென்ற உடரட்ட மெனிக்கேயில் டிக்கெட் இன்றி பிரயாணம் செய்த இவர் கடுகண்ணாவையில் தப்பி ஓட முயன்ற போது கண்டு பிடிக்கப்பட்டு ரயில் நிலைய அதிகாரி முன் நிறுத்தப்பட்டாராம்-

தனது அறிமுக அட்டையை எடுத்துக் காட்டியவர் திடீரென அறிமுக அட்டையை பறித்துக் கொண்டு ஓட முயன்ற அவசரத்தில் அட்டையை விட்டு விட்டு ஓடி மறைந்தாராம்-

இது பற்றி ரயில்வே மேலிடத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது- (ர-215)

## சித்த சுவாதீனமுற்ற மகன் தந்தையைத் தாக்கினாராம்

மன்னார், ஜூலை 16

கடந்த சில நாட்களாகத் திடீர் சித்தசுவாதீனத்தால் பீடிக்கப்பட்டிருந்தவர் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர், தனது தந்தையைக் கத்தியாலும், தடியாலும் தாக்கிக் காயம் விளைவித்துள்ளாராம்-

மூன்று நாட்களுக்கு முன் எருக்கலம்பிட்டியில் நடந்துள்ள இச் சம்பவத்தில் வயிற்றிலும் தோளிலும் கத்திக் குத்துக் காயங்களும், தலையில் தடியால் தாக்கிய காயமுமடைந்து உள்ள தந்தை இப்போது சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்- இவர் இப்போது குணமடைந்து வருவதாக அறியப்படுகிறது-

சந்தேக நபர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்-

இது பற்றி மேலும் கூறப்படுவதாவது- சம்பவ தினம் இரவு தந்தை உணவு உண்ட பின் வீட்டில் அமர்ந்திருந்தார்- அவ்வேளை, திடீரென வீட்டினுள் வந்த மகன் "எனது மனைவி எங்கே, சொல்" என்று கேட்டுக் கொண்டே தனது தந்தையைத் தாக்கிவிட்டாராம்-

திருமணம் செய்து, வேறு வீட்டில் தனது மனைவியுடன் வசித்து வரும் இவருக்குச் சில நாட்களாகத் திடீரென சித்தக் கோளாறு ஏற்பட்டுள்ளது என்று பொலீஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாம்- (ர-185)

## பனம் பழக் கன்னியிடம் வம்பு செய்து வாங்கினார்

காத்தான்குடி, ஜூலை 16

பனம்பழம் பொறுக்குவதற்காக காத்தான்குடி கடற்கரைப் பகுதிக்குப் போன கன்னிப் பெண்ணிடம் வம்பு செய்த தம்பியும் உதவிக்கு வந்த அண்ணனும் வாங்கிக் கட்டினர்.

உல்லாசமாகப் பொழுது போக்க அங்கு வந்த வாலிபனொருவன் இக் கன்னிப் பெண்ணைக் கண்டதும் மனதைப் பறி கொடுத்தானும். அப் பெண்ணை நெருங்கி பணம் கொடுத்து கன்னிப் பெண் வைத்திருந்த பனம் பழங்களை வாங்கினானும்-

பின்பு மெல்ல அப் பெண்ணின் கையைப் பிடித்து தன் இச்சைக்கு இணங்கும்படியும் வேண்டிய அளவு பணம் தருவதாகவும் கூறி பலாத்காரம் புரிய எத்தனித்தானும்- கன்னிப் பெண் தன் மானத்தைக் காப்பாற்ற கூச்சலிட்டாளாம்.

கூச்சலைக் கேட்ட அயலவர்கள் ஓடி வந்து வாலிபனைப் பிடித்து நையப்புடைத்தனர். நையப்புடைத்ததைக் கேள்விப்பட்ட வாலிபனின் அண்ணன் ஓடி வந்து அயலவரைத் தாக்க முற்பட்டாராம். அண்ணனும் பலமாகத் தாக்கப்பட்டாராம். கன்னிப்பெண்ணிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவ்விடத்தை விட்டு இரு சகோதரர்களும் நழுவினார்கள். (ர-135)

## ஆற்றில் படகு கவிழ்ந்து மூவரில் ஒருவர் பலியானார்

வாழைச்சேனை, ஜூலை 16

வாழைச்சேனை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த பனிச்சங்கேணி ஆற்றில் பேய்க் காற்றினால் மூவர் சென்ற படகு ஒன்று நீரில் மூழ்கியதால் ஒருவர் மாண்டார்-

இது பற்றி கூறப்படுவதாவது:-

பனிச்சங்கேணி ஆற்றில் தற்பொழுது புதிய பாலம் அமைப்பு வேலை நடைபெற்று வருகிறது. இதில் வேலை செய்யும் மூவர் கொஞ்சம் பலகைகளை ஒரு படகில் ஏற்றிக் கொண்டு மறு கரைக்குப் போய்க் கொண்டிருக்கும் பொழுது நடு ஆற்றில் வைத்து கடும் பேய்க் காற்று வீசியதால் படகு சுழன்று நீரில் மூழ்கியது.

படகில் சென்ற மூவரும் நீரில் மூழ்கினர். ஆனால் இருவர் நன்கு நீந்தத் தெரிந்ததால் சாமர்த்தியத்துடன், தெய்வாதீனமாக உயிர்த் தப்பினர்.

ஆனால் மகிந்தசிறி என்பவர் மட்டும் எமன் கையில் சிக்கினார். இவரது சலடத்தை பல படகுகள் தேடியும் மறுநாள் காலை 10 மணியளவிலேயே கண்டு பிடித்து கரை சேர்த்ததாகத் தெரிய வருகிறது- (ர)

தொழிலா? வியாபாரமா? காதலா?

**கவலை வேண்டாம்...**

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி- பி- பி- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

**நீலன் கந்தசாமி,**

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியிருந்த பெண்மணி மனு தாக்கல்

# வீட்டுச் சொந்தக்காரி மீது நோட்டீஸ் பிறப்பிப்பு

வீட்டுச் சொந்தக்காரியினால் வீட்டில் இருந்து தான் வெளியேற்றப்பட்டதாக கூறி வெள்ளவத்தை, காலி ரோட்டைச் சேர்ந்த நகைக்கடை ஒன்றின் உரிமையாளரான செல்வி சரஸ்வதி நாராயணன் தனது வழக்கறிஞர் மூலமாக சிறு வழக்குகள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

முகத்துவாரம், ரஜமல்வத்த ரோட்டைச் சேர்ந்த திருமதி பேர்ல் பியட்ரிஸ் பெரேரா என்பவரே வீட்டுச் சொந்தக்காரர் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம் மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- சம்பவதினம் பொலீஸாருடனும் காடையர்களுடனும் வந்த பிஸ்கால் ஊழியர்கள் கட்டடத்தில் இருந்த சாமான்களையும் எல்லா தளவாடங்களையும் வெளியில் இழுத்துப் போட்டு கட்டடத்தை தமதாக்கிக் கொண்டனர்.

அந்த கட்டடத்தைவிட்டு என்னை வெளியேற்ற வீட்டுச் சொந்தக்காரி வழக்கு தொடர்ந்த போதிலும் எனக்கு சம்மன்ஸ் வழங்கப்படவில்லை. நான் இல்லாமலும் எனக்குத் தெரியாமலும் இவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

அக் கட்டடத்துக்கு நான் வேண்டுமென்றே சேதம் விளைவித்தேன் என்ற அடிப்படையிலேயே அந்த வழக்கு தொடரப்பட்டது. ஆனால் திருமதி பெரேராவிடம் இருந்து கட்டடத்தை வாடகைக்கு நான் எடுத்தபோது அது சலூனாக இருந்தது. அதன் பின்னர் அக் கட்டடத்தை திருத்தினேன். திருத்தம் செய்ய எனக்கு 3000 ரூபா செலவானது.

அக் கட்டடத்தை திரும்ப தன்னிடம் ஒப்படைக்கும்படி மனுதாரர் கோரியுள்ளார்.

திரு. கே. எஸ். மகேசனின் அனுசரணையுடன் இம்மாதம் 14-ம் திகதி செல்வி நாராயணனின் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மனுவை விசாரணை செய்த சிறு வழக்குகள் கமிஷனர் திரு. டி. ரி. தேவேந்திர, திருமதி பெரேராவுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கும்படி உத்தரவிட்டார். (ர-177)

### ஐ. தே. கட்சி ஆதரிக்கும்

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசமைப்பு நிர்ணயச்சபை கூட்டத்திற்கு சமுகம் அளிப்பது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

அரசமைப்பு நிர்ணயம் சம்பந்தமாக பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கொண்டுவர இருக்கும் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பது எனவும் மேற்படி குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ர-6)

### மடுப்பதியை புனித நகராக்க கோரிக்கை

மடுமாதா தேவாலயம் அமைந்துள்ள பகுதியை புனித நகராக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் கிளை, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளது. (ர- 6)

### இன்று ரத பவனி

வேல் விழாவின் இரண்டாவது தினமான இன்று வெள்ளி ரதம் பவனி வர இருக்கிறது- இன்று காலை 7-30 மணியளவில் கொழும்பு செட்டியார் தெரு புதுக் கதிரேசன் கோவிலில் இருந்து புறப்படும் வெள்ளி ரதத்தில் கதிர்வேலாயுத சுவாமி வள்ளி தெய்வானை சமேதராய் ஆரோகணித்து பவனி வருவார்-

வெள்ளி ரதத்தில் புறப்படும் கதிர்வேலாயுத சுவாமி இன்று மாலை பம்பலப்பிட்டி நகரத்தார் ஸ்ரீ பழைய கதிரேசன் கோவிலைச் சென்றடைவார்- இன்று முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் முருகக் கடவுள் அங்கு வீற்றிருப்பார்-


தினத்தந்தி



மக்கள் தினசரி

- அன்றாட செய்திகள்!
- கருத்தான கார்ட்டூன்!
- விறுவிறுப்பான படக்கதை!
- சினிமா செய்திகள்!
- கேள்வி பதில்கள்!

பிரதி தினமும் பல புதுமையான செய்திகளைத் தரும் தினசரி

“தினத்தந்தி”

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ: | 114-75 |
| 6 மாத சந்தா | ரூ. | 57-40 |
| 3 மாத சந்தா | ரூ. | 28-70 |

வெஸ்டன்

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.


### எரி நட்சத்திர துண்டில் வைரங்கள்

மாஸ்கோ, ஜூலை. 16

எரி நட்சத்திரத் துண்டு ஒன்றில் வைரங்கள் இருப்பதைச் சோவியத் ஆராய்ச்சியாளர் தெனடி வித்யோவிகின் கண்டுபிடித்துள்ளார். அவரது ஆஸ்திரேலிய சகாக்கள் அனுப்பிய எரிநட்சத்திரத் துண்டிலிருந்து அவர் ஒரு மில்லி மீட்டர் அளவுள்ள வைரங்களைப் பிரித்தெடுத்தார்.

நுட்பமாகப் பரிசோதித்துப் பார்க்கையில், இவை பூமியிலிருந்து எடுக்கப்படும் வைரங்களைப் போலவே உள்ளன. இந்த எரி நட்சத்திரத் துண்டு மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள சவான்னுவில் 1961-ல் கண்டுபிடிக்கப்பட்டது. (ர)

### மாவை ஆலய தடை வழக்கு 30-ம் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆலயத்துள் வழிபாட்டுக்குச் செல்பவர்களை மாவை ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள், ஆலயத்தின் நிர்வாகி திரு. ஸி. சுந்தரலிங்கம் முதலானோர் தடை செய்யக் கூடாது என்று கோரி அட்டேர்ணி ஜெனரல் தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஐ. எம். இஸ்மாயில் கடந்த 7-ம் திகதி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தார் அல்லவா?

பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்களும் திரு. ஸி. சுந்தரலிங்கமும் தமது நிலைமையைத் தெளிவு படுத்தியும் பொலீஸார் மீது குற்றம் சாட்டியும் இன்று நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசி தாக்கல் செய்தனர்.

ஆலயத்தில் திருவிழா இல்லை, நித்திய பூசைகள் இல்லை, கம்யூனிஸ்டுகள் உள்ளே வருகிறார்கள், கத்தி சுத்தி பொறிக்கப்பட்டிருக்கிறது, பொலீஸார் ஆலயத்துள் “பைலா” ஆடிப்பாடிக் கொண்டிருக்கிறார்கள், விரதகாரர் விரதம் அனுஷ்டிக்கவோ, வழிபடவோ முடியாது தவிக்கிறார்கள், தம்மால் கடமை செய்யவில்லை என்றெல்லாம் இருவரும் அந்தச் சத்தியக் கடதாசியில் தெரிவித்துள்ளனர்.

அட்டேர்ணி ஜெனரலின் மனு மீதான விசாரணை எதிர்வரும் 30-ம் திகதி நடைபெறும் என்று நீதிபதி இன்று அறிவித்தார்.

### முதல் பரிசு

தேசிய லொத்தர் சபையின் 307-வது சுவீப் சீட்டிழுப்பில் முதல் பரிசு பெற்ற டிக்கெட் 24 S 0586 என்பதே சரியான தாகும். (ர)

### “செல்வா” தமிழ் மக்களை போராட அழைக்கின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 16

“எமது அடிப்படை உரிமைகளைப் பெற போராட்டம் ஆரம்பிக்க தயாராகுங்கள்”

காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தமிழரசு தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இவ்வாறு கூறினார்.

திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- சமஷ்டி மூலம் தமது மொழியையும் கலாசாரத்தையும் பாதுகாக்க தமிழ் மக்கள் எப்போதும் தயாராகவே இருக்கின்றனர். ஆனால் சிங்களத்தைப் படிக்க ஒவ்வொரு தமிழனையும் பலவந்தப் படுத்துவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கும் என்பதை அறிய வேதனையாக இருக்கின்றது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில், இந்தியாவில் இருந்து வந்தோரின் வம்சாவளியினரே தமிழர் என நீதியமைச்சர் திரு. ஜே. எம். ஜயமான்னே கூறியிருப்பது தமிழ் மக்களை வேதனைப் படுத்துவதாகும் என்றார். (ர)

### பிரிட்டனில் அவசர நிலை?

லண்டன், ஜூலை 16

பிரிட்டனில் அவசர கால நிலைமை அமுல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

துறைமுக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்படவிருக்கின்றது. 44 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக துறைமுக ஊழியர் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. (ர-6)

### ஆலோசனை கமிட்டிகளுக்கு இரகசிய வாக்கு

அரசாங்க திணைக்களம் ஒவ்வொன்றிலும் ஆலோசனைக் கமிட்டிகள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட உள்ளன. இவ்வாறான தேர்தல் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும்.

பொது நிர்வாக உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு செய்த சிபாரிசு ஒன்றை மந்திரி சபை ஏற்றுக்கொண்டுள்ளது என அறியப்படுகிறது. (ர-6)

### நியமனம்

அரசாங்க பயிர்ச் செய்கைக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக திரு. கிளிபோர்ட் ரத்வத்தை நியமிக்கப்பட்டுள்ளார். (ர-6)


கராட்டே



இளம் காளையரே! கன்னியர்களே!! இதோ உங்களுக்கும் ஒரு சிறந்த கராட்டே வாத்தியாரினால் எழுதப்பட்ட கராட்டே பாடத் திட்டங்கள். உங்கள் உடல் மெலிந்திருப்பதாலும் சக்தி குறைந்திருக்கிறபடியாலும் ஒரு எதிரியுடன் போராடுவதற்கு தயக்கம் அடைகிறீர்கள். அந்தக் கவலையைப் போக்கி, எதிரியை அடக்கக்கூடிய ஜூடோ, கராட்டே, சீனடி பயிலவேண்டும். முக்கிய ஸ்தானங்களை குறிப்பிடும் ஒரு மனித சித்திரமும் அடங்கியுள்ள நூற்றுக் கணக்கான சித்திரங்களுள்ள “கராட்டே வீரர்” என்ற முதல் பாகம் 5/- பணம் செலுத்தி பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படும்.

CENTRAL SUPPLIERS,
PHYSICAL TRAINING ENTP;
No. 10, De Silva Road,
Dehiwala.


இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை)- வெளியிட்டது திகதி 17 ஜூலை 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org